இராணுவத்தின்

# இருவார செய்திகள்

2025 ஜனவரி 15-31 பதிப்பு - 46

ஊடக மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகத்தின் வெளியீடு




www.army.lk

www.youtube.com/
SLArmyMedia

www.facebook.com/
SriLankaArmyDefendersoftheNation

www.x.com/
sri_lanka_army

www.instagram.com/
sl_army

இலங்கை இராணுவம்

Directorate of Media and Psychological Operations, Army Headquarters | www.army.lk | 0112076967

# இராணுவ தளபதி மரியாதை நிமித்தம் பிரதமரை சந்திப்பு



இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆர்எஸ்பீ சீடீஎப்-என்டியூ பீஎஸ்சீ ஐஜீ அவர்கள் இலங்கைப் பிரதமர் கௌரவ கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களை கொழும்பில் அவரது அலுவலகத்தில் 2025 ஜனவரி 16 ம் திகதி மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

கலந்துரையாடலின் போது, பிரதமர் இராணுவத் தளபதியின் புதிய நியமனத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதுடன், மேலும் அவரது எதிர்கால முயற்சிகளுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தேசிய பாதுகாப்பைப் பராமரிப்பதிலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதிலும் இராணுவத்தின் முக்கிய பங்கை அவர் வலியுறுத்தியதுடன் அதே நேரத்தில் அரசாங்கத்திற்கு இராணுவத்தின் உறுதியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இந்த கலந்துரையாடலின் போது, நல்லெண்ணத்தின் அடையாளமாக, இராணுவத் தளபதி பிரதமருக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

(புகைப்படம் ஆதாரம்: பிரதமர் அலுவலக ஊடகம் மற்றும் தொடர்பாடல் பிரிவு)

# இலங்கை பீரங்கி படையணியில் இராணுவத் தளபதிக்கு கௌரவ மரியதை



இலங்கை பீரங்கி படையணியின், புதிதாக நியமிக்கப்பட்ட 25வது இராணுவத் தளபதியான லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆர்எஸ்பீ சீடீஎப்-என்டியூ, பீஎஸ்சீ ஐஜீ அவர்களை கௌரவிக்கும் வகையில் 2025 ஜனவரி 17ம் திகதி பிரமாண்டமான பாராட்டு அணிவகுப்பு விழாவை நடாத்தியது. இலங்கை பீரங்கி படையணியில் இருந்து வெளிவந்த நான்காவது இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆவார்.

படையணி தலைமையகத்திற்கு வருகை தந்த இராணுவத் தளபதியை, 55 வது காலாட் படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிஜீஎஸ் பெர்னாண்டோ யூஎஸ்பீ எச்டிஎம்சீ பீஎஸ்சீ அவர்கள் மரியாதையுடன் வரவேற்றார். பின்னர், படையணி நினைவு தூபிக்கு மலர் வளையம் வைத்து வீரமரணம் அடைந்த போர் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

*தொடர்ச்சி 02ம் பக்கம்*

# "உங்கள் தேசிய கடமையில் வலுவான சுய ஒழுக்கத்துடனும் உண்மையான அர்ப்பணிப்புடனும் ஈடுபடுங்கள்" - பதில் பாதுகாப்பு அமைச்சர்

"நாடு எதிர்கொள்ளும் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, நாம் நமது கடமையை வலுவான சுய ஒழுக்கத்துடனும் உண்மையான அர்ப்பணிப்புடனும் மேற்கொள்ள வேண்டும், மேலும் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலுடன் செயல்பட வேண்டும்" என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) நேற்று (ஜனவரி 16) கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது கருத்து தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு வருகை தந்த பதில் பாதுகாப்பு அமைச்சரை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ மற்றும் வைத்தியசாலை அதிகாரிகள் வரவேற்றனர். அதைத் தொடர்ந்து, இலங்கை இராணுவத்தின் முதன்மையான வைத்திய நிலையத்தின் வைத்திய பணிப்பக விளக்கக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்பு, பல வார்டுகள் மற்றும் வைத்தியசாலை வளாகத்தின் வசதிகள் தொடர்பான ஆய்வு விஜயம் மேற்கொண்டார்.

*தொடர்ச்சி 02ம் பக்கம்*



# இராணுவ தளபதி பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரி மரியாதை நிகழ்வில் பங்குபற்றல்

பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரி அதன் மதிப்புமிக்க சுவரில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆர்எஸ்பீ சீடீஎப் என்டியூ பீஎஸ்சீ ஐஜீ அவர்களை இணைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவை நடத்தியது.

வருகை தந்த இராணுவத் தளபதியை, பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரி கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் எச்.எச்.கே.எஸ்.எஸ் ஹேவகே ஆர்டப்ளியூபீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ ஆர்சீடிஎஸ் பீஎஸ்சி அவர்கள் வரவேற்றார். பின்னர், முப்படையினரால் அவருக்கு பாதுகாவலர் அறிக்கையிடல் மரியாதை வழங்கப்பட்டது.

*தொடர்ச்சி 02ம் பக்கம்*



# இலங்கை இராணுவத்தினரால் அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கு ஆதரவளிக்கும் மருத்துவ முகாம்

இலங்கை இராணுவம், இராணுவத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ், அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கான மருத்துவ முகாமை ஏற்பாடுசெய்துள்ளது. அதற்கமைய இதன் திட்டத்தின் மூலம் படைவீரர்களின் நல்வாழ்வுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. கொழும்பு மாகாணத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள படைவீரர்களுக்கான சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக, இம் முயற்சி 2025 ஜனவரி 20 முதல் 24 வரை ராகம, ரணவிரு செவனவில், நடைபெற உள்ளது.

*தொடர்ச்சி 03ம் பக்கம்*

# ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்களுக்காக இலங்கை இராணுவத்தின் 11 சிறிமெட் குழு தென் சூடானுக்கு புறப்பட தயார்

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்களுக்காக தென் சூடானிலுள்ள சிறிமெட் தரம் 2 வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கான இலங்கை இராணுவ வைத்திய படையின் 11 வது குழு புறப்படுவதற்குச் முன்னர் 2025 ஜனவரி 31 வெரஹெரவில் உள்ள இலங்கை இராணுவ மருத்துவ படையணி தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை வழங்கினர்.

அவர்கள் புறப்படுவதற்கு முன், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ ஆர்எஸ்பீ சீடிஎப் என்டியூ பீஎஸ்சீ ஐஜீ அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, படையினர் சம்பிரதாய அணிவகுப்பு மரியாதை செலுத்தினர். மத்திய பாதுகாப்பு படை தலைமையக தளபதியும் இலங்கை இராணுவ மருத்துவ படையணி படைத்தளபதியுமான மேஜர் ஜெனரல் டி.கே.எஸ்.கே தொலகே யூஎஸ்பீ என்பீஎஸ் பீஎஸ்சி அவர்கள் இராணுவ தளபதியை நுழைவாயிலில் பாதுகாவலர் அணிவகுப்பு மரியாதை வழங்கியதனை தொடர்ந்து வரவேற்றதுடன் பின்னர் அணிவகுப்பு மரியாதை வழங்குவதற்காக அழைத்து சென்றார்.

மேற்படி குழுவினர் முழுமையான பொறுப்புக்களை ஏற்கவுள்ளதை குறிக்கும் வகையில் தேசிய கொடி, இராணுவ கொடி, ஐக்கிய நாடுகளின் கொடி மற்றும் இலங்கை இராணுவ வைத்திய படையணியின் கொடி ஆகியவற்றை சம்பிரதாயங்களுக்கமைவாக இலங்கை இராணுவ வைத்திய படை குழுவிடம் தளபதி கையளித்தார். தென் சூடானுக்குச் செல்லும் 11 வது குழுவில் கட்டளை அதிகாரி கேணல் ஆர்எம்டிபி ராஜபக்ஷ யூஎஸ்பீ மற்றும் 2 ம் கட்டளை அதிகாரி லெப்டினன் கேணல் கேடிபீ டி சில்வா தலைமையில் 18 இராணுவ அதிகாரிகள், 02 கடற்படை அதிகாரிகள் மற்றும் 46 சிப்பாய்கள் உள்ளடங்கலாக 64 இராணுவ வீரர்கள் தயாராக உள்ளனர்.

படையினரிடம் உரையாற்றிய இராணுவத் தளபதி, அவர்களை வாழ்த்தியதுடன் இலங்கையின் ஐ.நா. அமைதி காக்கும் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, நாட்டிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இந்த பணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தெற்கு சூடானில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள 10வது சிறிமெட் குழு , புதிய குழுவிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடு திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிகழ்வில் பிரதி பதவி நிலை பிரதானியும் கஜபா படையணி படைத்தளபதியுமான மேஜர் ஜெனரல் எம்ஜிடபிள்யூடபிள்யூடபிள்யூஎம்சிபி விக்ரமசிங்க ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ என்டியூ பீஎஸ்சீ, சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் கலந்து கொண்டனர்.





## "உங்கள் தேசிய கடமையில் வலுவான சுய ஒழுக்கத்துடனும் உண்மையான அர்ப்பணிப்புடனும் ஈடுபடுங்கள்" - பதில் பாதுகாப்பு அமைச்சர்

*1ம் பக்க தொடர்ச்சி*

வைத்தியசாலை வழங்கும் பெருமதிமிக்க சேவைகளுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்த அவர், தற்போதைய சகாப்தத்திற்கு புதிய மற்றும் உன்னதமான அரசியல் கலாசாரம் தேவை என்று வலியுறுத்திய அவர் அங்கு ஊழல் எந்த வடிவத்திலும் சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் சகிக்க முடியாதது என்றும் தெரிவித்தார். மக்களின் வாழ்க்கையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக-பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்கு சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவது மிக முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார். அரசாங்கத்தின் "தூய இலங்கை" திட்டம் இந்த உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

தனது வருகையின் போது நோயாளர்கள், வைத்தியசலை ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலைக்கு வருகை தந்தவர்களுடன் கலந்துரையாடினார்.

தனது வருகையின் நிறைவாக, பதில் பாதுகாப்பு அமைச்சர் பதவியேற்ற பின்னர் வைத்தியசாலைக்கு தனது முதல் அதிகாரப்பூர்வ வருகையை குறிக்கும் வகையில் அதிதிகள் புத்தகத்தில் கருத்துக்களை பதிவிட்டார்.

பிரதி இராணுவ பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க, சிரேஷ்ட அதிகாரிகள், மருத்துவமனையின் வைத்திய மற்றும் நிர்வாக ஊழியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.







## இலங்கை பீரங்கி படையணியில் இராணுவத் தளபதிக்கு கௌரவ மரியதை

*1ம் பக்க தொடர்ச்சி*

இதனைத் தொடர்ந்து, இலங்கை பீரங்கி படையணியின் படையினரால் இராணுவத் தளபதிக்கு பாதுகாவலர் அறிக்கையிடல் மரியாதை வழங்கப்பட்டதை தொடர்ந்து 6வது இலங்கை பீரங்கி படையணி அணிவகுப்பு மைதானத்தில் சம்பிரதாய மரியாதை அணிவகுப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் இராணுவத் தளபதி வளாகத்தில் மரக்கன்று நாட்டினார்.

அனைத்து நிலையினருக்குமான தேநீர் விருந்துபசாரத்தின் போது, இராணுவத் தளபதி படையணி படையினருடன் கலந்துரையாடியதுடன் தனது எண்ணங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். நிகழ்வின் நிறைவாக நிகழ்வுகளின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில், அதிதிகள் பதிவேட்டு புத்தகத்தில் தனது பாராட்டுக் குறிப்புகளை கையெழுத்திட்டார்.

முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் சீஎஸ் வீரசூரிய (ஓய்வு) ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ விஎஸ்வி யூஎஸ்பீ என்டியூ ஐஜீ, இலங்கை பீரங்கிப் படையணியின் படைத் தளபதியும் நிறைவேற்று பணிப்பாளர் நாயகமுமான மேஜர் ஜெனரல் கேவீஎன்பீ பிரேமரத்ன ஆர்எஸ்பீ யூஎஸ்பீ பீஎஸ்சீ, ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள், அவர்களது துணைவியார், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.





## பன்சியகம கிராமிய வைத்தியசாலையின் கட்டுமானப் பணிகள் படையினரால் நிறைவு

இந்த நல்லுறவு சந்திப்பின் போது, வணக்கத்திற்குரிய மகா நாயக்க தேரர், நாட்டின் ஆயுதப் படைகளை மரியாதையுடனும் அர்ப்பணிப்புடனும் வழிநடத்த இராணுவத் தளபதிக்கு வலிமை, ஞானம் மற்றும் விவேகம் கிடைக்க ஆசீர்வதித்தார்.

பின்னர் இராணுவத் தளபதி மகா நாயக்க தேரரின் வழிகாட்டுதல் மற்றும் ஆசீர்வாதங்களுக்காக தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் கடமைகளைப் பாதுகாப்பதில் தனது அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அவர் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பு நாட்டின் மத நிறுவனத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே நிலவும் வலுவான கலாசாரம் மற்றும் ஆன்மீக உறவுகளை மேம்படுத்துவதாகும்.





## இராணுவ தளபதி பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரி மரியாதை நிகழ்வில் பங்குபற்றல்

*1ம் பக்க தொடர்ச்சி*

பின்னர், இராணுவத் தளபதி புகழ்பெற்ற இராணுவத் தலைவர்களின் மதிப்புமிக்க குழுவில் இணைந்துக்கொள்ளும் பொருட்டு தனது சுயவிவரத்தை புகழ்மிக்க சுவரில் திரைநீக்கம் செய்தார். அதனை தொடர்ந்து, 19வது பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரி பாடநெறியில் கலந்து கொண்ட அதிகாரிகளுக்கு அவர் உரையாற்றினார். பங்கேற்பார்களில் 125 உள்நாட்டு அதிகாரிகளும், நட்பு நாடுகளைச் சேர்ந்த 26 வெளிநாட்டு அதிகாரிகளும் இருந்தனர்.

இராணுவத் தளபதி தனது உரையின் போது விலைமதிப்பற்ற அனுபவங்களையும் அறிவுகளையும் பகிர்ந்து கொண்டு பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்தியதுடன் தொழில்முறை இராணுவக் கல்வியின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

பாராட்டு தெரிவிக்கும் விதமாக, கல்லூரி தளபதி, இராணுவத் தளபதிக்கு ஒரு நினைவுப் பரிசை வழங்கினார். பதிலுக்கு, தளபதி கௌரவத்திற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் வழங்கப்பட்ட தேநீர் விருந்தின் போது, இராணுவத் தளபதி பாடநெறி பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடியதுடன் வழிகாட்டுதலை வழங்கி, நட்புறவை வளர்த்துக் கொண்டார். விருந்தினர் பதிவேட்டு புத்தகத்தில் நிகழ்வைப் பற்றிய தனது எண்ணங்களையும் அவர் பதிவு செய்தார்.

அன்றைய நிகழ்வின் இறுதி நிகழ்வாக பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரிக்கு தனது வருகையினை நினைவு கூறும் விதமாக படங்களை எடுத்துகொண்டார்.

சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.



# 61 வது காலாட் படைப்பிரிவினால் மாத்தறையில் கடற்கரை சுத்தம்

"அழகான நாடு, புன்னகைக்கும் மக்கள்" என்ற கருப்பொருளின் கீழ் "தூய இலங்கை" திட்டத்தின் ஒரு பகுதியாக, 61 வது காலாட் படைப்பிரிவின் படையினர் 2025 ஜனவரி 16 ஆம் திகதி மாத்தறை, தெவிநுவர மற்றும் திக்வெல்ல ஆகிய இடங்களில் கடற்கரை சுத்தம் செய்யும் திட்டத்தில் பங்கேற்றனர்.

மாத்தறை மாவட்ட செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் கௌரவ திரு. சுனில் ஹந்துன்னெத்தி அவர்களின் தலைமையில், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

மேஜர் ஜெனரல் கே.டீ.பீ டி சில்வா ஆர்எஸ்பீ என்டியூ பீஎஸ்சி அவர்களின் மேற்பார்வையின் கீழ், 613 வது காலாட் பிரிகேட் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ், மாத்தறை, திக்வெல்ல, ஹிரிகெட்டிய பிரதேச செயலகப் பிரிவுகள் உட்பட 18 இடங்களில் படையினர் கடற்கரைகளை சுத்தம் செய்தனர்.

இலங்கை சிங்கப் படையணியின் 9 வது இலங்கை சிங்க படையணி 3 வது (தொ) கெமுனு ஹேவா படையணி ஆகியவற்றின் மொத்தம் 104 வீரர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.



# 2024 தேசிய கடற்கரை செபக்டக்ரா போட்டியில் இலங்கை இராணுவம் சாம்பியன்

இலங்கை தேசிய செபக்டக்ரா சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2024 ஆம் ஆண்டு தேசிய கடற்கரை செபக்டக்ரா சாம்பியன்ஷி போட்டி 2025 ஜனவரி 19 அன்று கல்கிசை கடற்கரையில் நிறைவடைந்தது. இலங்கை இராணுவ ஆண்கள் மற்றும் பெண்கள் செபக்டக்ரா அணிகள் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவுகளில் வெற்றி பெற்றன.

இராணுவ காற்பந்து குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் கேஏயூ கொடித்துவக்கு ஆர்எஸ்பீ யூஎஸ்பீ பீஎஸ்சீ ஐஜீ அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை இராணுவ செபக்டக்ரா அணிகள் இந்த குறிப்பிடத்தக்க சாதனையை அடைந்தன.




# இலங்கை இராணுவத்தினரால் அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கு ஆதரவளிக்கும் மருத்துவ முகாம்

*1ம் பக்க தொடர்ச்சி*

இந்த மருத்துவ முகாம் போர்வீரர்கள் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு பணிப்பகத்தினரால் நிர்வகிக்கப்படுகிறது, மேலும் படைவீரர்களுக்கு, குறிப்பாக அங்கவீனமுற்றவர்களுக்கு அல்லது செயற்கை கால்கள் மற்றும் அறுவை சிகிச்சை சாதனங்கள் தேவைப்படுபவர்களுக்கு அத்தியாவசிய மருத்துவ உதவியை வழங்குவதில் கவனம் செலுத்தும் என்பது குறிப்பிடதக்கதாகும். பங்கேற்பாளர்களில் ஓய்வு பெற்றவர்கள், 22 ஆண்டுகளுக்கும் மேலான சேவையைக் கொண்டவர்களும் மருத்துவ சவால்களை எதிர்கொண்ட தீவிரமாக சேவை செய்யும் பணியாளர்கள் அடங்குவர்.

மருத்துவ முகாம் தொடர்ச்சியான மருத்துவ தேவைகளை மதிப்பிடுவதற்கும் நிவர்த்தி செய்வதற்கும் தொழில்முறை சுகாதார ஆலோசனைகள் உட்பட பல்வேறு சேவைகளை வழங்கும். செயற்கை கால்கள் மற்றும் அறுவை சிகிச்சை சாதனங்களின் சரியான செயல்பாட்டை உறுதி செய்வதற்கான ஆய்வுகள், பழுதுபார்ப்பு மற்றும் மேம்படுத்தல்களுடன் பராமரிப்பு சேவைகளும் அடங்கும். மேலும், மன ஆரோக்கியம் மற்றும் உணர்ச்சி நல்வாழ்வை ஆதரிக்க ஆலோசனை சேவைகள் வழங்கப்படும், அதே நேரத்தில் ஊட்டச்சத்து நிபுணர்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த தனிப்பயனாக்கப்பட்ட உணவு ஆலோசனைகளை வழங்குவார்கள்.

இந்த முகாம் ஒரு நாளைக்கு சுமார் 500 இராணுவ வீரர்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, ஐந்து வைத்தியர்கள் கொண்ட குழுவால் மருத்துவ பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் தோல் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ சேவைகளுக்கான சிறப்பு மருத்துவமனைகளும் வழங்கப்படுகின்றன, குறிப்பாக வீரர்களின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

இம் முயற்சி பல வீரர்களின் ஓய்வுக்குப் பிறகு நிலையான மருத்துவத்தை பின்தொடர்தல் மற்றும் போதுமான சுகாதாரப் பராமரிப்பை அணுகுவதில் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்ய முயல்கிறது. விரிவான பராமரிப்பை வழங்குவதன் மூலம், இராணுவத்தினரால் சாத்தியமான சிக்கல்களைத் தடுக்கவும், இந்த வீரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், செயற்கை சாதன பராமரிப்பில் முகாமின் கவனம், சரியான நேரத்தில் பழுதுபார்ப்புகளை உறுதி செய்வதன் மூலமும், இக் கருவிகளின் ஆயுட்காலத்தை நீட்டிப்பதன் மூலமும் நிதிச் சுமைகளைக் குறைக்க நிலையான வள முகாமைத்துவத்துக்கான இராணுவத்தின் உறுதிப்பாட்டைக் எடுத்துகாட்டுகிறது.








# இராணுவ பயிற்சி பாடசாலையில் கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் வன போர் மற்றும் விசேட காலாட்படை நடவடிக்கைகள் பாடநெறி நிறைவு

கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் வன போர் (சிப்பாய்கள்) பாடநெறி எண். 38 மற்றும் விசேட காலாட் படை நடவடிக்கைகள் பாடநெறி எண். 76 ஆகியவற்றின் 16 அதிகாரிகள் மற்றும் 263 சிப்பாய்களின் பயிற்சி நிறைவு விடுகை அணிவகுப்பு 2025 ஜனவரி 15 மாதுருஓயா இராணுவப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது.

காலாட் பணிப்பகத்தின் பணிப்பாளர் நாயகமும் கெமுனு ஹேவா படையணியின் படைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் டபிள்யூபிஜேகே விமலரத்ன ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ அவர்கள் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அணிவகுப்பை நேரில் பார்வையிட்டார். அதன் பின்னர் பிரதம விருந்தினர், சிரேஷ்ட அதிகாரிகளுடன் இணைந்து, பாடநெறியில் பங்குபற்றியவர்களுக்கு சின்னங்களை வழங்கினார்.

பின்வரும் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் விடுகை அணிவகுப்பின் போது சிறப்பு விருதுகளைப் பெற்றனர்:

கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் வன போர் (சிப்பாய்கள்) பாடநெறி எண். 38:

சிறந்த மாணவர் - 1 வது விசேட படையணியின் கோப்ரல் எச்ஏபீ பியூமல்

விசேட காலாட் படை நடவடிக்கைகள் பாடநெறி எண். 76:

சிறந்த உடற்தகுதி - 5 வது கஜபா படையணியின் லான்ஸ் கோப்ரல் டபிள்யூ எஸ் கே விஜேதுங்க

சிறந்த துப்பாக்கி சூட்டு வீரர் - 8 வது இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியின் லெப்டினன் ஆர்ஏஎம்எஸ்டி ரத்நாயக்க

சிறந்த மாணவர் (சிப்பாய்) - 16 வது இலங்கை சிங்கப் படையணியின் ரைபிள் சிப்பாய் டபிள்யூபீசீ ரசிது

சிறந்த மாணவ (அதிகாரி) - 16வது இலங்கை சிங்க படையணியின் கெப்டன் ஆர்பீஜிஎஸ்எம் ஜயசேகர

சிறந்த பிரிவு - 19வது இலங்கை இலேசாயுத காலாட் படையணி

இந்நிகழ்வில் சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் கலந்து கொண்டனர்.






# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீரையடி குளம் கிழக்கு படையினரால் சீரமைப்பு

24 வது காலாட் படைப்பிரிவின் 241 வது காலாட் பிரிகேடின் 18 வது விஜயபாகு காலாட் படையணி படையினர், 2025 ஜனவரி 19 அன்று சேதமடைந்த வீரையடி குளத்தை வெற்றிகரமாக சீரமைத்தனர். மேலும் மண்அரிப்பு மற்றும் சேதத்தைத் தடுக்க பாதிக்கப்பட்ட பகுதிகளில் படையினர் மண் மூட்டைகளை அடுக்கி சீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இந்த உடனடி நடவடிக்கையானது சுற்றியுள்ள சமூகங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைக்க உதவியது.







# 21 வது காலாட் படைப்பிரிவினரால் ஹொரவபொத்தானையில் வெள்ள நிவாரணம் பணிகள்

21 வது காலாட் படை படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யூஎம்எஸ்சீகே வனசிங்க ஆர்எஸ்பீ யூஎஸ்பீ அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், 212 வது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் பிஎபீஎம் பாலசூரிய ஆர்எஸ்பீ அவர்களின் நெருக்கமான மேற்பார்வையின் கீழ், 4 வது இலங்கை தேசிய பாதுகாவலர் படையணி படையினர், சீரற்ற காலநிலையால் சிறிதளவு சேதமடைந்த கல்குளம் மஹானொச்சிகுளம் குள கரையில் ஏற்பட்ட வெள்ள பெருக்கை மணல் மூட்டைகளைப் பயன்படுத்தி உடனடியாக தடுக்கும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலும், ஹொரவ்பொத்தானையில் உள்ள கிரி இப்பான்வெவ குள கரையை 211 வது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் டி.டீ.பீ. சிறிவர்தன பீஎஸ்சீ அவர்களின் மேற்பார்வையின் கீழ் 5 வது (தொண்டர்) கஜபா படையணி படையினர் மணல் மூட்டைகளைப் பயன்படுத்தி சீர் செய்தனர்.

அதே போன்று, 5 வது (தொண்டர்) கஜபா படையணி ஹொரவ்பொத்தானை நகரப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிப்பதற்காக 300 க்கும் மேற்பட்ட மதிய உணவுப் பொதிகளை தயாரித்து ஹொரவ்பொத்தானை பிரதேச செயலாளருக்கு வழங்கியது. இந்த முயற்சிக்கான உலர் உணவுப் பொருட்கள் ஹொரவ்பொத்தானை பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டன.

இதற்கிடையில், 2025 ஜனவரி 19 அன்று வெஹெரதென்ன பாலம் சுமார் 6 அடி நீரில் மூழ்கியுள்ளது. வெஹெரதென்ன பாலத்தின் ஊடாக கிராம மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் 5 (தொண்டர்) கஜபா படையணி படையினர் இலங்கை கடற்படைக்கு உதவினர்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அதேவேளை, பலுகஸ்வெவ சின்னசிட்டிக்குளத்தின் அணைக்கட்டு சிறிய அளவில் சேதமடைந்து காணப்பட்டதை தொடர்ந்து 213 வது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் பீஎம் டி சில்வா ஆர்எஸ்பீ யூஎஸ்பீ அவர்களின் மேற்பார்வையின் கீழ், 2 வது இயந்திரவியல் காலாட் படையணி படையினர் 2025 ஜனவரி 20 ம் திகதி மறுசீரமைப்பு பணிகளை மேற்கொண்டனர்.

அதற்கமைய 2025 ஜனவரி 20ம் திகதி ஹொரவபொத்தானை வீதி நீரில் மூழ்கியதை தொடந்து 5 வது (தொ) கஜபா படையணி படையினர் யுனிபபல்களைப் பயன்படுத்தி போக்குவரத்து வசதிகளை வழங்கினர்.




# 2025 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவைகள் எல்லே போட்டியில் இலங்கை இராணுவம் வெற்றி

பாதுகாப்பு சேவைகள் எல்லே விளையாட்டு போட்டி 2025 இல் இராணுவ எல்லே அணி வெற்றி பெற்று, தொடர்ந்து நான்காவது ஆண்டாக சாம்பியன்ஷிப்பைப் பெற்றுள்ளது.

இலங்கை கடற்படை எல்லே குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போட்டி ஜனவரி 21 முதல் 23 வரை வெலிசர நவலோக மைதானத்தில் நடைபெற்றது. இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை அணிகள் போட்டியிட்டன. தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி இராணுவ எல்லே அணி கடற்படை அணியை தோற்கடித்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றது. முதலாம் சுற்றுப் போட்டியில் இராணுவ வீரர்கள் 14 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தனர்.

இராணுவத்தின் வெற்றிக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில், இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியின் லான்ஸ் கோப்ரல் கே.ஐ. லக்மால் அவர்கள் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் போட்டியின் சிறந்த வீரர் ஆகிய இரண்டு மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றார். அவரது திறமை அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இலங்கையின் முப்படைகளின் தடகள திறமை மற்றும் நட்புறவை வெளிப்படுத்தும் ஒரு தளமாக பாதுகாப்பு சேவைகள் எல்லே போட்டி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.







# குறிபார்த்து சுடல் மற்றும் ஸ்னைப்பர் பயிற்சி பாடசாலை ஸ்னைப்பர் பாடநெறி நிறைவு

தியத்தலாவ குறிபார்த்து சுடல் மற்றும் ஸ்னைப்பர் பயிற்சி பாடசாலையில் 2025 ஜனவரி 25, ஸ்னைப்பர் பயிற்சி பாடநெறி -22 சின்னம் வழங்கல் மற்றும் விடுகை அணிவகுப்பு விழாவுடன் நிறைவடைந்தது.

இந் நிகழ்வில் மத்திய பாதுகாப்பு படை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் டி.கே.எஸ்.கே. தொலகே யூஎஸ்பீ என்பீஎஸ் பீஎஸ்சி அவர்கள் பிரதம அதிதியாக பங்குபற்றினார்.

பிரதம விருந்தினர் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி, பட்டதாரிகளுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். ஐந்து அதிகாரிகள், பதினொரு சிப்பாய்கள் மற்றும் மாலைத்தீவைச் சேர்ந்த ஆறு சிப்பாய்கள் ஸ்னைப்பர் வீரர்களாக தகுதி பெற்றனர். பின்வரும் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு தலைமை விருந்தினரால் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன:

களத்தில் சிறந்த மாணவர் - இந்திய இராணுவத்தின் என்.கே. வீர் சிங்

சிறந்த உடற்தகுதி - விஷேட படையணியின் கோப்ரல் டீ.எம்.டி.எஸ்.பி. இலங்கரத்ன

சிறந்த துப்பாக்கி சுடும் வீரர் - இலங்கை இலேசாயுத காலாட்படையின் லான்ஸ் கோப்ரல் ஆர்.பீ நுவான்

சிறந்த வெளிநாட்டு மாணவர் - இந்திய இராணுவத்தின் என்.கே. வீர் சிங்

சிறந்த ஸ்னைப்பர் வீரர் - விஷேட படையணியின் கேப்டன் ஏ.எம்.ஆர்.கே.கே. முல்லேகம

மேலும் 2025 ஜனவரி 26, அன்று, குறிபார்த்து சுடல் மற்றும் ஸ்னைப்பர் பயிற்சி பாடசாலை தளபதி பிரிகேடியர் ஆர்.பீ. முனிப்புர ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ அவர்களால் நிறைவு உரை நிகழ்த்தப்பட்டது. சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.



# 18 வது கெமுனு ஹேவா படையணி படையினரால் பிபில குளக்கட்டு சீரமைப்பு

மொனராகலை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 18 வது கெமுனு ஹேவா படையணி படையினர், கரகஹவெல கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுடன் இணைந்து, 2025 ஜனவரி 26 அன்று பிபில,அலவத்த கும்புர குளக்கட்டு அரிப்பை தடுத்தனர்.

12 வது காலாட் படைப்பிரிவின் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ், குளக்கட்டு உடனடியாக சீர்செய்யப்பட்டது.



# வெள்ளம் சூழ்ந்த பகுதியில் இருந்து மூன்று கிராம மக்களை 23 வது காலாட் படைப்பிரிவு படையினர் மீட்பு

2025 ஜனவரி 19 அன்று ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக கிராமவாசிகள் வெள்ளத்தில் சிக்கித் தவித்ததை தொடர்ந்து 232 வது காலாட் பிரிகேட்டின் 12 வது கெமுனு ஹேவா படையணி படையினர் தீவிரமாக செயற்பட்டு உடனடியாக மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டு, அவர்களுக்கு பாதுகாப்பையும் உடனடி உதவியையும் வழங்கினர்.







# 10 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணி படையினரால் தென்னியன்குளம் குளக்கட்டு சீரமைப்பு

நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக, தென்னியன்குளம் குளக்கரையின் நிரம்பி வழியும் இடம் சிறிது சேதமடைந்துள்ளது. இதனால் வரவிருக்கும் பேரழிவை உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில், 56 வது காலாட் படைப்பிரிவின் தளபதி மற்றும் 561 வது காலாட் பிரிகேட் தளபதி ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், 10 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணியின் கட்டளை அதிகாரி லெப்டினன் கேணல் கேஏகே ஹேவாபதகே அவர்களின் மேற்பார்வையில் 10 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணி படையினர் 2025 ஜனவரி 19 அன்று சீரமைப்பு பணிகளை முன்னெடுத்தனர். 10 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணியின் 03 அதிகாரிகள் மற்றும் 30 சிப்பாய்களை கொண்ட குழுவினர், அரச அதிகாரிகள் மற்றும் சுமார் 100 உள்ளூர்வாசிகளின் ஆதரவுடன் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டனர். இது சமூக கூட்டாண்மையின் வலுவான உணர்வை வெளிப்படுத்துகின்றது.







# இலங்கை தேசிய பாதுகாவலர் படையணி படையினரால் குருநாகல் புகையிரத நிலையத்தில் தூய்மையாக்கல் பணி

இராணுவத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ், வடமேற்கு மாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்பின் கீழ், இலங்கை தேசிய பாதுகாவலர் படையணி படையினர் 2025 ஜனவரி 28 ஆம் திகதி குருநாகல் புகையிரத நிலையத்தில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். "தூய இலங்கை" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியை, கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத் தளபதி, இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியின் படைத் தளபதி மற்றும் இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியின் நிலைய தளபதி ஆகியோர் மேற்பார்வையிட்டனர்.

30 படையினர் மற்றும் புகையிரத திணைக்கள ஊழியர்கள், இந்த முயற்சியில் பங்கேற்று, தூய்மையான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பேணுவதற்கு பங்களித்தனர்.





# மேற்கு பாதுகாப்பு படை தலைமையகத்தினால் வீடு வழங்கல்

இலங்கை இராணுவ தொண்டர் படையணியின் பதில் தளபதியும் மேற்கு பாதுகாப்பு படை தலைமையக தளபதியுமான மேஜர் ஜெனரல் ஏஎச்எல்ஜீ அமரபால ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ அவர்கள் 2025 ஜனவரி 22ம் திகதி அன்று பண்டாரகம, வல்கமாவில் செல்வி எம். நிலுஷா குமாரி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அதிகாரப்பூர்வமாக கையளிப்பதற்கான நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த திட்டம், இலங்கை இராணுவத்தின் 75 வது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக, மேற்கு பாதுகாப்பு படை தலைமையக தளபதியின் விடாமுயற்சியுடன் கூடிய தலைமையின் கீழ் நிறைவடைந்தது.

14 வது காலாட் படைப்பிரிவின் தளபதி மற்றும் 612 வது காலாட் பிரிகேட் தளபதி ஆகியோரின் மேற்பார்வையுடன், இலங்கை இராணுவ முன்னோடிப் படையணியின் 1 வது படையலகு இந்த கட்டுமானப் பணிகளை மேற்கொண்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, சமுர்த்தி திணைக்களம், பண்டாரகம பிரதேச செயலகம் மற்றும் 1 வது இலங்கை இராணுவ முன்னோடிப் படையணி மற்றும் உள்நாட்டு நன்கொடையாளர்கள் ஆகியோரின் நிதி மற்றும் பொருள் பங்களிப்புகளால் வீடு வெற்றிகரமாக கட்டி முடிக்கப்பட்டது.

விழாவின் போது, பிரதம விருந்தினர் பயனாளியிடம் சாவியை ஒப்படைத்துடன் மேலும் செல்வி எம். நிலுஷா குமாரிக்கு வளமான எதிர்காலத்திற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்தத் திட்டத்தை நனவாக்குவதில் கட்டுமானக் குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பையும் அவர் பாராட்டினார்.

இந்த விழாவில் 14 வது காலாட் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் கே.ஜே.என்.எம்.பீ.கே. நவரத்ன ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ என்டியூ , பண்டாரகம பிரதேச செயலாளர் (உதவி அரசாங்க அதிபர்) , 1 வது இலங்கை இராணுவ முன்னோடிப் படையணியின் கட்டளை அதிகாரி, சிரேஷ்ட அதிகாரிகள், அரச அதிகாரிகள், நன்கொடையாளர்கள் மற்றும் கிராமவாசிகளும் கலந்துக் கொண்டனர்.

